

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் திருமங்கலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, மற்றும் நாடாளுமன்ற தேர்தல் நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசினார். உடன் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான.இமையநாதன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆர்.சுதா எம்.பி., எஸ்.ராஜ்குமார் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், ஒன்றியக் குழு தலைவர் காமாட்சிமூர்த்தி, மற்றும் சௌமியன், பிரபாகர் மற்றும் பலர் உள்ளனர்.

### முதலமைச்சரின் பெருந்தன்மையான கோரிக்கையை ஏற்று - வெளியேற்றப்பட்ட

# அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு அனுமதி!

சென்னை, ஜூலை 23 -

சட்டப்பேரவையில் அவை நடவடிக்கை களுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து முதலமைச்சர் பெருந்தன்மையுடன் விடுத்த கோரிக்கையை ஏற்று அவர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க பேரவைத் தலைவர் மு.அப்பாவு அனுமதி வழங்கினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது கள்ளக்குறிச்சி விவகாரத்தை எழுப்பி அ.தி.மு.க உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். கேள்வி நேரத்திற்கு பின்னர் கவன ஈர்ப்பு தீர்மானம் மீது விவாதம் நடத்த அனுமதி அளிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்த பின்னரும், அ.தி.மு.க.வினர் அதனை ஏற்காமல் அவையில் அமைதிக்கு குந்தகம் விளை விக்கும் வகையில் நடந்துகொண்டனர்.

இதையடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் பேரவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவையின் மாண்புக்கு எதிராக அ.தி.மு.க. உறுப்பினர்கள் செயல் பட்டதால் அவர்கள் வெளியேற்றப்பட்டதாக பேரவைத்



தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கள்ளக் குறிச்சி விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க தான் உத்தரவிட்டு இருப்பதாக தெரிவித்தார். அ.தி.மு.க.வினர் திட்டமிட்டு நாடகத்தை அரங்கேற்றி உள்ளதாகவும், விதி களுக்கு, மரபுகளுக்கு மாறாக அ.தி.மு.கவினர் நடந்து கொண்டுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

ஜனநாயக முறையில் சட்டமன்றம் நடைபெற வேண்டும் என்பதில் தான் உறுதியாக உள்ளதாக கூறிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பிரதான எதிர்க்கட்சியினர் பங்கேற்கும் வகையில் அவர்கள் மீதான நடவடிக்கையை ரத்து செய்து அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதி அளித்து பேரவைத் தலைவர் அப்பாவு உத்தரவிட்டார். பெருந்தன்மையோடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அ.தி.மு.கவினரை அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்ததை பேரவைத் தலைவர் அப்பாவு ஏற்றுக்கொண்ட நிலையில், முதலமைச்சரின் பெருந்தன்மையை அ.தி.மு.கவினர் புரிந்து கொள்ளாமல் அவை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர்.

### கோவையில்

# தளபதி ரத்த தான இயக்கம் சார்பில் ரத்த தான முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தொடங்கி வைத்தார்!

கோவை, ஜூன் 23-

முத்தமிழறிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு,தளபதி இரத்த தான இயக்கம் சார்பில்,கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம்.

கோவை வரதராஜபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள சாய் விவாகா மகால் திருமண மண்டபத்தில்,தளபதி இரத்ததான இயக்கத்தின் சார்பில்,

கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாமை, கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமை தாங்கி, சிறப்புரையாற்றி, இரத்த தானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில், 500 க்கும் மேற்பட்டோர் இரத்த தானம் வழங்கினார்கள். திராவிடர் இயக்க தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் மணியரசன் (56) உடல் தானம் செய்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்வே.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,மாநகர் மாவட்ட துணைச்செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாநகர் மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்த், கழக தலைமைக் கழக நிர்வாகிகள் கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மறை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆனந்தகுமார்,

திமுக பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், வெ.ந. உதயகுமார், மு.மா.ச.முருகன், நோயல்செல்வம், ஆடிட்டர் சசிகுமார், ச.கார்த்திகேயன், சரஸ்வதி புஷ்பராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத், பகுதிக்கழக செயலாளர்கள் மு.சிவா, மா. நாகராஜ், ப.பசுபதி , S.M.சாமி செந்தமிழ்செல்வன், கே.எம்.ரவி,எ.எம். கிருஷ்ணராஜ், அஞ்சுகம் பழனியப்பன்அணிகளின் அமைப்பாளர்கள் பெ.மாரிசெல்வன் இரா. தனபால், கராத்தே அர்ஜுன், சிவப்பிரகாஷ், சஞ்சய், பாபு, கண்ணன், வி.மணி, ராஜ்குமார், வட்டக்கழக செயலாளர்கள் முருகானந்தம், மா. சிவக்குமரன்,கே.ஆனந்தகுமார், ராஜேந்திரன்,lpf சண்முகம், சண்முகசுந்தரம், ப.ப.சிவகுமார், மணிகண்டன், இளங்கோவன், நாராயணன், ஏ.எஸ்.நடராஜ், நா.சண்முகசுந்தரம், மோகன்ராஜ்,எஸ்.போஸ்,

சுரேஷ் குமார், ஆ.மாடசாமி, வி.எ.பாலசுப்பிரமணியம்,கேபிள் எம்.நித்யானந்தம், நவீன் முருகன்,

மண்டல தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மீனாலோகு, தெய்வயானைதமிழ்மறை, மாமன்ற உறுப்பினர்கள் சாந்தாமணி,அம்பிகா தனபால், வித்யாராமநாதன், ஆதி மகேஷ்வரி திராவிடமணி,மரியராஜ், பத்மாவதி, கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், துணை அமைப்பாளர்கள் கோவை அருண்,லாராபிரேம்தேவ், க.மணிகண்டன்,வானவன் மணி,அசோக், டாக்டர். சஜீவ் ரங்கசாமி, உதயகுமார், ராஜேஷ், ஆர்.மயில்சாமி, பாலமுரளி, ஆண்டனி, கராத்தே ராஜேஷ், சின்னத் தங்கம், ரவிச்சந்திரன், சி.டி.சி.நடராஜ்,சி. எம்.வேலுமணி, சதீஷ், சீமான் சுந்தரம், எம்.எஸ். எம்.தங்கவேல், சி.எஸ். முருகேஷ், கஸ்தூரி அருண், ஆவை சதீஷ், தினேஷ் குமார், முரசொலி வெங்கடகிரி,சாரமேடு இஸ்மாயில்,

கோவை மாநகர் மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட அனைத்துக் கழக நிர்வாகிகள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாணவ, மாணவிகள், இளைஞர்கள், இளம் பெண்கள், தன்னார்வலர்கள், கழக உடன்பிறப்புக்கள்,கழக செயல்வீரர்கள், கழக தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



கோவையில் தளபதி ரத்த தான இயக்கம் சார்பில் ரத்த தான முகாமை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் தொடங்கி வைத்தார்.





விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை வடக்கு ஒன்றியம் பனமலையில் தேர்தல் பணிக்குழு அலுவலகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி. திறந்து வைத்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கவுதமசிகாமணி, மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர். எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், ப்ரியா ப.விஜயரங்கன், ப.கார்த்தி வேல்மாறன், காணை வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர்

# மா.பா.அன்புதுரை இல்லத் திருமண விழா! கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! அமைச்சர் பெருமக்கள் - கழக நிர்வாகிகள் வாழ்த்து!

சென்னை, ஜூன். 23

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை - அ.சரஸ்வதி ஆகியோரின் புதல்வி அ. சூர்யாவிற்கும், சென்னை, கே.ஆர்.கணேஷ் - சுதா கணேஷ் ஆகியோரின் புதல்வர் ஆர்.ஜி. பிரவினுக்கும் திருமண விழா நாளை (24.6.2024 - திங்கட்கிழமை) காலை 9 மணியளவில், சென்னை - 28, இராஜா அண்ணாமலைபுரம், கிரீன்வேஸ் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண விழாவினை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார்.

திருமண விழாவில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! ஆர்.ஆர்.சாமிநாதன் வரவேற்புரை!

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜூன் 23-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்

22.06.2024 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வாராப்பூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர் ஆர். சாமிநாதன் வரவேற்புரையிலும் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை யாற்றினார்.

மேலும் வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர், துணை மேயர் எம். லியாகத் அலி, எம்.எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, கலைஞர் கருணாநிதி, ஆர்.ரவிச்சந்திரன், ஆர்.துரை, பாரதி கருப்பையா, முத்தமிழ் செல்வி சரவணன், ஆர். மணிமாறன், சு.தனபால், மணிமாறன், சரண்யா ஜெய்சங்கர், முத்துலட்சுமி சாமி அய்யா, க.உதயசூரியன், தில்லையப்பன், ஏ.சீனி (எ) சுப்பிரமணியன், கலிய முத்து, க.செ.கலியமூர்த்தி வண்ணை குமார், சுந்தர்ராஜ் ,கரிகாலன், சத்தியமூர்த்தி, லாசர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முடிவில் ஒன்றிய துணைச் செயலாளர் சி. மணிகண்டன் நன்றி கூறினார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!

நாமக்கல், ஜூன் 23-

நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (23.06.2024 -ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு, மாவட்ட கழக அலுவலகம் தளபதி



யார் அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சார்பு அணி தலைவர்கள், அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1) வருகின்ற ஜூலை 10ஆம்தேதிவிக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் தேர்தல் களப்பணியாற்றுவது தொடர்பாக.

2) ஒன்றிய பகுதிகளில் நடைபெறவுள்ள மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவது தொடர்பாக.

3) இல்லந்தோறும் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக.

4) கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வாராப்பூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர் ஆர். சாமிநாதன் வரவேற்புரையிலும் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர், துணை மேயர் எம். லியாகத் அலி, வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் அசோக் பாண்டியன், எம்.எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, கலைஞர் கருணாநிதி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.